(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என்னிடம் காட்டப்படும் பட்டா ஊத்துமலை கிராமம் சர்வே எண் 73/1ல் ஏக்கர் 1 .37 யோக்கோப்பு தேவர் குமாரர்கள் பெரிய அந்தோணி தேவர், சின்ன அந்தோணி தேவர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. பட்டா பி.வா.சா.ஆ.1. மேற்படி சொத்தில் மேற்படி இரண்டு நபர்களை தவிர வேறு யாருக்கும் பாத்தியம் கிடையாது என்றால் சரியல்ல. வேறு ஒரு நபருக்கும் பாத்தியம் உண்டு. வேறு நபர் யார் என்றால் பாக்கியதேவர் மற்றும் பாக்கியதேவர் குமாரர் பாக்கியசாமி பாண்டியனுக்கு பாத்தியமாகும். அவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பெரிய அந்தோணி தேவர், சின்ன அந்தோணி தேவரும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை வடபாதி, தென்பாதி என பிரித்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பிரித்திருக்கலாம்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)